# தியாகம் - ஆபிரகாம்

ஆபிரகாமும் லோத்தும் எகிப்து தேசத்தை விட்டு வேறு இடத்துக்குச் சென்றனர். இருவருக்கும் ஆட்டு மந்தைகளும், மாட்டு மந்தைகளும் கூடாரங்களும் இருந்தன. அவர்கள் கூடாரம் அமைத்து வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் ஆபிரகாம் கூடாரத்திலிருந்து வெளியே வந்து ஆண்டவரைத் தொழுது கொண்டார். லோத்துவுடன் உரையாடலில் ஈடுபட்டார்.



**ஆபிரகாம்** : வணக்கம் லோத்து. ஆண்டவர் எங்களுக்கு மிகுதியான உடைமைகளைத் தந்துள்ளார்.

**லோத்து** : ஆம்! கடவுள் எமக்குத் தந்துள்ள உடைமைகளுக்காக நாம் நன்றி செலுத்த வேண்டும். நாங்கள் இருவரும் ஒற்றுமையாக வாழ்வது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கின்றது.

**ஆபிரகாம்** : இவ்வாறு ஒற்றுமையாக வாழ்வதற்கு என்ன காரணம் உன்னால் கூற முடியுமா? எமக்குள் ஒருவித பிரச்சனையுமே இல்லை.

**லோத்து** : உங்களுடன் சேர்ந்து வாழவேண்டும் என்ற விருப்பத்துடனே உங்களுடன் இங்கு வந்தேன்.

**ஆபிரகாம்** : நாம் இருவரும் உறவினர். ஆனாலும் எனது கால்நடை மேய்ப்பர்களுக்கும், உனது கால்நடை மேய்ப்பர்களுக்கும் இடையே தகராறு ஏற்படுகின்றதே!

**லோத்து** : என்ன செய்வது?

**ஆபிரகாம்** : நாடு முழுவதும் உன் கண்முன் இருக்கின்றது அல்லவா? என்னிடமிருந்து பிரிந்து செல் லோத்து.

**லோத்து** : நான் எவ்வாறு உம்மை விட்டுச் செல்வது? இந்த அழகான நாட்டைப் பிரித்துக் கொள்வது எப்படி?

**ஆபிரகாம்** : நீ இடப்பக்கம் சென்றால் நான் வலப்பக்கம் செல்வேன். நீ வலப்பக்கம் சென்றால் நான் இடப்பக்கம் செல்வேன்.

**லோத்து** : நல்லது, நான் நீர்வளம் நிறைந்திருக்கும் யோர்தான் சுற்றுப் புறத்தை தெரிவு செய்து கொள்கின்றேன்.

**ஆபிரகாம்** : நான் கானான் நாட்டுப் பகுதியில் வாழ்கின்றேன். உன் நலமான வாழ்வுக்கு என் வாழ்த்துக்கள்!

தியாக மனப்பான்மையுடன் செயல்பட்ட ஆபிரகாமை ஆண்டவர் மென் மேலும் ஆசீர்வதித்தார். அவன் வழிமரபினரைப் பூவுலகின் மண்ணைப் போல பெருகப் பண்ணினார்.

செயற்பாடு

1. ஆபிரகாமும் லோத்துவும் தமக்கு இடங்களை தெரிவு செய்த விதத்தை எழுதுக.
2. நாம் எதையும் பகிர்ந்து கொள்ளும் போது எந்த வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.